ஒரு புதிய அனுபவம்
# தினகரன்
Dinakaran

திருநின்றவூரில்

# ஜெயா கல்வி குழுமம் சார்பில் 1428 பேருக்கு பணி நியமன ஆணை




▶ ஜெயா கல்வி குழுமம் சார்பில் வேலைவாய்ப்பு முகாமில் 1428 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

திருவள்ளூர், பிப்.11: ஜெயா கல்வி குழுமம் சார்பில் வேலைவாய்ப்பு முகாமில் 1428 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

சென்னை அடுத்த திருநின்றவூரில் உள்ள ஜெயா கல்வி குழுமம் மற்றும் மத்திய உயர் கல்வித்துறையின் தொழிற்பயிற்சி அமைச்சகமும் இணைந்து மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை நடத்தியது. ஜெயா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமிற்கு ஜெயா கல்விக் குழுமங்களின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்தார். ஜெயா பொறியியல் கல்லூரி முதல்வர் சங்கரநாராயணன், ஜெயா கல்விக் குழுமங்களின் இயக்குனர் சண்முகம், வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பு அதிகாரி அருண் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் 100 க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திண்டிவனம், விழுப்புரம், பாண்டிச்சேரி சேலம், சென்னை என தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பொறியியல் பட்டதாரிகள், கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் படித்த 3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இம்முகாமில் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். இதில் நேர்முகத் தேர்வில் தேர்வு செய்யப்பட்ட 1428 பேருக்கு பணி நியமன ஆணைகளை பல்வேறு முன்னணி நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் மத்திய உயர் கல்வித்துறை தொழில் பயிற்சி உதவி இயக்குனர் சுரேஷ்குமார் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இவ்வேலை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வேலை தேடும் பொறியியல் பட்டதாரிகள், இளைஞர்கள் அனைவருக்கும் இந்த முகாம் ஒரு அருமையான வாய்ப்பாக அமைந்தது என வேலை தேடி வந்தவர்களும், பெற்றோர்களும் தெரிவித்தனர்.